# செந்தமிழ் இலக்கணம்

மூன்றும் படிவம் — சிறப்புப்பகுதி.

★

வித்துவான், V. நரசிம்மன், M. A.
வித்துவான், C. இராமசாமி
தமிழ் ஆசிரியர்-கழக உயர்நிலைப்பள்ளி, வத்தலகுண்டு.

★

ஜெனரல் புக் கம்பெனி
கும்பகோணம்

1955 [விலை ரூ. 0—8—0

பதிப்புரிமை]

முதற் பதிப்பு — 1954
இரண்டாம் பதிப்பு — 1955

*Approved by the Text Book Committee—Madras for class use.*
*Vide page 26 dated 4—5—55*

ஜோதிஷ்மதி பிரஸ், கும்பகோணம்

# முன்னுரை

செந்தமிழ் இலக்கணம் என்னும் இச்சிறுநூல் அண்மையில் (அதாவது 28—8—51 தேதியில்) அரசியலார் வெளியிட்ட முதல் மூன்று படிவங்கட்குரிய பாடத்திட்டத்தை அடியொற்றி அப்படிவங்களின் சிறப்புப்பகுதி மாணவர்க்குப் பயன்படுமாறு இயற்றப்பெற்றுள்ளது.

இந்நூல் எடுத்துக்காட்டுக்களினின்று விதியை வகுத்துரைக்கும் இண்டக்டிவ் மெதட் (inductive method) என்னும் போதனை முறைக்கிணங்க இயன்றது. ஆங்காங்குப் புதிய முறையில் பயிற்சிகள் பல கொடுக்கப்பட்டுள்ளன. அவை மாணவர்க்கு இலக்கணத்தில் சிறந்த தேர்ச்சியை உண்டாக்குவனவாம். இதில் கூறப்படும் உதாரணங்கள் மாணவர் அறிவுக்கெட்டியவைகளேயாம்.

மாணவர், இலக்கணத்தை விரும்பிக் கற்கும் வகையில் புத்தகம் அமையவேண்டும் என்னும் நோக்கத்தோடு இப்புத்தகம் இயற்றப்பட்டிருப்பதால் மாணவர்க்குப் பெரிதும் பயன்படும் என்று நம்புகிறோம்.

கல்வித்துறை வல்லார் இதனை ஆதரித்து எங்களுக்கு ஊக்கமளிப்பாராக.

ஆக்கியோர்கள்

# பொருளடக்கம்


| எண் | பொருள் | பக்கம் |
|---|---|---|
| **I.** | **எழுத்து:** | |
| (1) | உயிர்ப்பு எழுத்துக்கள் .... | 1 |
| (2) | ஒலிப்பு எழுத்துக்கள் .... | 1 |
| (3) | மூக்கின் வழியாக ஒலிக்கும் எழுத்துக்கள் .... | 1 |
| (4) | வாயின் வழியாக ஒலிக்கும் எழுத்துக்கள் .... | 2 |
| (5) | அலகு பிரித்துச் சொல்லுதல் .... | 2 |
| (6) | எழுத்தின் ஒலி, சொல்லில் இடத்திற்கேற்ப மாறுதல் .... | 3 |
| **II.** | **சொல்:** | |
| (1) | சுட்டு, வினா .... | 7 |
| (2) | இடுகுறிப் பெயர், காரணப் பெயர் .... | 8 |
| (3) | வழூஉச் சொல்லும், திருத்தமும் .... | 10 |
| (4) | ஒரு பொருட் பல சொற்கள் பொருளில் நுட்பமாக வேறுபடுதல் .... | 11 |
| (5) | கால இடை நிலைகள் ... | 13 |
| (6) | இடைச்சொல் .... | 14 |
| (7) | உரிச்சொல் .... | 16 |
| (8) | சாரியைகள் .... | 18 |
| (9) | ஆகுபெயர் .... | 19 |
| (10) | வெளிப்படைக் குறிப்பு .... | 21 |
| (11) | இயல்பு வழக்கு .... | 22 |
| (12) | தகுதி வழக்கு .... | 24 |
| **III.** | **தொடராக்கம்:** | |
| (1) | தொகைநிலைத் தொடர்கள் .... | 26 |
| (2) | தொகாநிலைத் தொடர்கள் .... | 29 |

**IV. புணர்ச்சி:**

(1) உயிர்முன் வல்லினம்—(மிகும் இடங்கள், மிகா இடங்கள்) .... 31
(2) மெய்ம்முன் உயிர் — (லகர ளகர ஈறு) .... 32
(3) மெய்ம்முன் மெய் — (லகர ளகர ஈறு) .... 33
(4) மெய்ம்முன் மெய் — (னகர ணகர ஈறு) .... 34
(5) மெய்ம்முன் மெய் — (மகர ஈறு) .... 35
(6) சில விசேடப் புணர்ச்சிகள் .... 35

**V. அணிகள்:**

(1) தற்குறிப்பேற்ற அணி .... 37
(2) தன்மை நவிற்சியணி .... 38
(3) உயர்வு நவிற்சியணி .... 38
(4) முரண் தொடை அணி .... 39

**VI. நிறுத்தற் குறிகள்:**

(1) கோடு இடுதல் .... 40
(2) இடைப்பிற வைப்புக் குறிகள் .... 40
(3) பிறைக குறிகள் .... 41

பயிற்சி வினாக்கள் .... 42

# செந்தமிழ் இலக்கணம்

## மூன்றும் படிவம்.

---

# I. எழுத்து

## 1. உயிர்ப்பு எழுத்துக்கள்
## (Breathed Sounds)

க், ச், ட், த், ப் என்னும் ஐந்து எழுத்துக்களையும் உச்சரித்துப் பாருங்கள். இந்த எழுத்துக்கள் உயிர்த்தல் மாத்திரத்திலேயே அதாவது ஒலி பிறர் காதுக்குக் கேளாத நிலையிலேயே உச்சரிக்கக் கூடியவைகளாக இருத்தலை அறியலாம். அதனால் இந்த எழுத்துக்கள் உயிர்ப்பு எழுத்துக்கள் எனப்படும்.

## 2. ஒலிப்பு எழுத்துக்கள்
## (Voiced Sounds)

மேற்கண்ட ஐந்து வல்லின மெய்களைத் தவிர மற்ற எழுத்துக்கள் எல்லாம் பிறர் காதுக்குக் கேட்குமாறு ஒலித்து உச்சரிக்கும் எழுத்துக்கள் ஆகும். ஆகையால் அவையெல்லாம் ஒலிப்பு எழுத்துக்கள் எனப்படும்.

## 3. மூக்கின் வழியாக ஒலிக்கும் எழுத்துக்கள்

ங், ஞ், ண், ந், ம், ன் என்னும் ஆறு மெல்லின மெய்யெழுத்துக்களும், மற்றும் இம்மெய்கள் உயிர்

களோடு கூடுவதால் உண்டாகும் 72 மெல்லின உயிர் மெய்யெழுத்துக்களும் மூக்கை இடமாகக் கொண்டு உச்சரிக்கப்படும் எழுத்துக்களாம்.

## 4. வாயின் வழியாக ஒலிக்கும் எழுத்துக்கள்

மேலே மூக்கின் வழியாக உச்சரிக்கும் எழுத்துக் களாகக் கூறப்பட்டவை நீங்கலாக மற்ற எழுத்துக்கள் எல்லாம் வாயின் வழியாக ஒலிக்கும் எழுத்துக்களாம்.

## 5. அலகு பிரித்துச் சொல்லுதல்

அலகு பிரித்துச் சொல்லுதலாவது, சொற்களைப் பல அசைகளாகப் பிரித்துச் சொல்லுதலாம். சொற்கள் ஒலிக்கும் விதத்தைக் கவனித்து அதற்குத் தக்கபடி அலகு பிரிக்கவேண்டும். உதாரணமாக, வண்டு என்னும் சொல்லை அலகு பிரித்துச் சொல்லவேண்டு மானால் வண், டு எனப் பிரிக்கவேண்டுமேயல்லாமல், வ, ண், டு, என்ருவது வ, ண்டு என்ருவது பிரித்துச் சொல்லக்கூடாது.

சொற்களைப் பிரித்து முதல் வரியின் இறுதியிலும் அடுத்த வரியின் முதலிலும் எழுத நேரிட்டாலும் மேற் கண்டவாறு அலகு பிரித்தே எழுதவேண்டும். உதாரணமாக வண்டு என்பதில் வண் என்பதை முதல் வரியின் இறுதியிலும், டு என்பதை அடுத்த வரியின் முதலிலும் எழுதவேண்டும்.

அடியிற் சில சொற்கள் அலகு பிரித்து எழுதப் பட்டிருப்பதைப் பாருங்கள். அப்படியே நீங்கள்

மற்றும் எல்லாச் சொற்களையும் அலகு பிரித்து எழுதக் கற்றுக்கொள்ளுங்கள்.

| சொல் | | அலகு பிரித்து எழுதும் விதம் |
|---|---|---|
| தீபம் | — | தீ, பம் |
| பழம் | — | பழம் |
| கறுப்பு | — | கறுப், பு |
| கண்டான் | — | கண், டான் |
| விழுந்தனர் | — | விழுந், தனர் |
| போகிறான் | — | போ, கிறான் |
| நடந்துகொண்டிருந்தனர் | — | நடந், துகொண், டிருந், தனர் |

## 6. எழுத்தின் ஒலி, சொல்லில் இடத்துக்கேற்ப மாறுதல்

தமிழ் எழுத்துக்களில் சில, அவை சொற்களில் பொருந்திவரும் இடத்திற் கேற்றவாறு ஒலி வேறுபாடுகளை அடைகின்றன. அவற்றைப்பற்றி இப்போது தெரிந்துகொள்வோம்.

கப்பல்—இதில் சொல்லின் முதலில் க என்னும் வல்லினமெய் வல்லோசையை நன்கு பெற்றிருக்கிறது.

அகம்-இங்குச் சொல்லின் இடையில் க என்னும் வல்லினமெய் வல்லோசை குறைந்து வருகிறது.

தங்கம்—இங்கு மெல்லின மெய்யை அடுத்து வந்த க என்னும் வல்லினமெய் வல்லோசை மிகவும் குறையப்பெற்று மெல்லோசை பொருந்தி வருகிறது.

பக்கம்—இங்கு இரட்டித்து வந்த ககரமாகிய வல்லினமெய் வல்லோசை நன்கு பொருந்தப்பெற்று வருகிறது.

மேற்கண்டவற்றால் வல்லின மெய்கள் சொற்களின் முதலிலும், இரட்டித்து வரும்போதும் வல்லோசையை நன்கு பொருந்தி வரும். சொற்களின் இடையில் தனித்து வரும்போது வல்லோசை சிறிது குறையப்பெறும். மெல்லினத்தை அடுத்து வரும்போது வல்லோசை நன்கு குறையப்பெற்று மெல்லோசை பொருந்தி வரும். சகரம் மொழிக்கு முதலிலும் வல்லோசை குறையும். அடியிற்கண்ட வேறு உதாரணங்களாலும் மேற்கண்ட செய்தியை அறிக.

(உ-ம்) கத்தி, பகல், பொங்கல், சுக்கு.
சட்டி, பசு, அச்சம், பஞ்சு,
இடம், கட்டம், வண்டல்.
தட்டு, பதநீர், மத்து, பந்து
பட்டு, இப்படி, கபிலை, கம்பி
அறம், முற்றம், பன்றி,

சொற்களின் இறுதியில் வல்லின மெய்யின்மேல் ஏறிவரும் உகரம் சில இடங்களில் மாத்திரை குறைகிறது. அதாவது ஒருமாத்திரை அளவான உகரம் அரை மாத்திரையாகக் குறைந்துவரும். இப்படி குறைந்து வருவது குற்றியலுகரம் எனப்படும்.

(உ-ம்) ஆறு, வயிறு. சுக்கு, பஞ்சு, சால்பு, எஃகு.

ஐகாரம் சொற்களின் முதலிடை கடைகளில் மாத்திரை குறைந்து வரும். தன்னைக் குறிக்கும்

போதும், அளவு எடுக்கும்போதும் மாத்திரை குறையாது. ஐகாரம் இரண்டு மாத்திரை அளவு உள்ளது. அது மாத்திரை குறையும்போது ஒரு மாத்திரையாகக் குறையும்.

(உ-ம்) தையல், இடையன், பகைவன், மகை.

ஔகாரம் சொல்லுக்கு முதலில் மாத்திரை குறைந்து வரும். தன்னைக் குறிக்கும்போதும் அளவு எடுக்கும்போதும் குறையாது. இரண்டு மாத்திரை அளவுள்ள ஔகாரம் குறையும்போது ஒரு மாத்திரையாகக் குறையும்.

(உ-ம்) ஔவை, கௌவை.

மகரம், வகரத்தின்முன் தனக்குரிய அரை மாத்திரையில் குறைந்து கால் மாத்திரை பெற்று வரும்.

(உ-ம்) வரும் வண்டி, வலம் வந்தான்.

## பயிற்சி

1. •பின் வருபவை உயிர்ப்பு எழுத்துக்களா, ஒலிப்பு எழுத்துக்களா என்று கூறுக:

ச், ரு, உ, எ, ச, க், கு, ட, ஒ

2. பின் வருபவைகளில் மூக்கின் வழி ஒலிக்கும் எழுத்துக்களைத் தனியாகவும், வாயின் வழி ஒலிக்கும் எழுத்துக்களைத் தனியாகவும் பிரித்து எழுதுக:

லா, ஞ். ஆ. ஒ, கா, ஞா, ண, தா, ப், ஔ.

3. பின்வரும் சொற்களை அலகு பிரித்து எழுதுக:—

கொடுமை, படுக்கை, கட்டடம், எழுந்திருந்தான், பண்கத்துக் கொண்டான், இடையன், வினாவிடை, இராப்பகல்.

4. பின்வரும் சொற்களில் தடித்த எழுத்துக்கள் ஒலி அல்லது மாத்திரை குறையப்பெற்றனவா, அல்லவா என்று குறிக்க; மாத்திரை குறையப்பெற்றால் எவ்வளவு மாத்திரை பெற்றுவந்தது என்றும் குறிக்க:

தகரம், பங்கு, அச்சம், சினம், வட்டம், கடல், கண்டம், குன்று, பத்து, கத்தி, மனம், கௌவினான், கடை, மடையன், மரம், வளர்ந்தது, கௌவை, பனங்காய், பயறு, கட்டு, ஐந்து.

# II. சொல்

## 1. சுட்டு, வினா

### சுட்டு

**பின்கண்டவற்றைக் கவனி :**

அவன், அம்மனிதன்
இவன், இப்பலகை

இங்கு அ, இ என்னும் எழுத்துக்கள் பொருள்களைச் சுட்டிக்காட்ட வந்தன.

**தெரிந்துகொள் :**

பொருள்களைச் சுட்டிக்காட்ட வரும் எழுத்துக்கள் சுட்டெழுத்துக்களாம்.

அ, இ என்பவை சுட்டெழுத்துக்களாக வந்ததை அறிந்தீர்கள். உ என்னும் எழுத்தும் சுட்டெழுத்தாக வரும்.

(உ-ம்) உவன், உப்பக்கம்,

அகரம் தூரத்திலுள்ள பொருளையும், இகரம் சமீபத்திலுள்ள பொருளையும், உகரம் மேற்பக்கம், பின்பக்கம், நடுவிடம் ஆகிய இடங்களிலுள்ள பொருளையும் சுட்டிக் காட்டும். சுட்டிக் காட்டும் பொருளில் வராவிட்டால் இவை சுட்டெழுத்துக்கள் ஆகா.

(உ-ம்) அண்ணன், இடம், உரல்.

*பின்கண்டவற்றைக் கவனி:*

எவன், எம்மனிதன்
எவர், எப்பக்கம்

மேற்கண்ட சொற்களில் எகரம் வினாப்பொருளை அறிவிக்க வந்தது. ஆதலால் அது வினா வெழுத்தாகும்.

வினாப்பொருளில் வராவிட்டால், எகரம் வினா வெழுத்து ஆகாது.

(உ-ம்) எள், எண்ணம்.

மேற்கண்ட சுட்டுச் சொற்களும், வினாச்சொற் களும் கொத்துக் கொத்தாக அமைந்து வரும்.

(உ-ம்) அவை, இவை, உவை, எவை..
அந்த, இந்த, உந்த, எந்த.
அம்மரம், இப்பசு, உப்படம், எப்பாகம்.

### பயிற்சி

சுட்டு வினாச் சொற்கள் தொகுதியாக வந்ததற்கு உதார ணங்கள் தருக.

## 2. இடுகுறிப் பெயர், காரணப் பெயர்

கல், மண், மரம், பொன் — இப்பெயர்களைக் கவனியுங்கள். இவை அந்தந்தப் பொருள்களுக்கு எக்காரணத்தால் பெயர்களாக அமைந்தன என்று தெரியவில்லை. இவ்வகையான பெயர்கள் இடுகுறிப் பெயர்கள் எனப்படும்.

இடுகுறிப் பெயராவது இடப்பட்ட குறியாக அமைந்த பெயராம்.

பின் கண்ட பெயர்களைக் கவனி:

*வளையல்*—இது வளைந்திருக்கும் காரணத்தால் ஏற்பட்ட பெயர்.

*சிலம்பு*—இது ஒலிக்கும் காரணத்தால் ஏற்பட்ட பெயர். (*சிலம்பல்=ஒலித்தல்*)

*நாற்காலி*—இது நான்கு கால்களையுடைய காரணத்தால் ஏற்பட்ட பெயர்.

*அகழி*—அகழப்பட்ட அதாவது தோண்டப் பட்ட காரணத்தால் ஏற்பட்ட பெயர்.

*ஆழி*—ஆழமான காரணத்தால் ஏற்பட்ட பெயர். இவ்வாறு காரணங் கருதி இடப்பட்ட பெயர்கள் **காரணப் பெயர்களாம்.**

மேற்கூறியவற்றால் பெயர்கள் இடுகுறிப் பெயர், காரணப் பெயர் என இருவகைப்படுவதை அறிக.

## பயிற்சி

1. இடுகுறிப் பெயர்கள் சில கூறு.

2. காரணப் பெயர்கள் சில கூறு.

3. பின்கண்ட பெயர்களைக் காரணப் பெயரா அன்றா எனக் காரணம் காட்டிக் கூறு:

காற்றாடி, செடி, அரிவாள், முக்காலி, பலா, தென்னை, பனை, நிலம், பெரியவன், சிறியவன்.

## 3. வழூஉச் சொல்லும், திருத்தமும்

சென்ற இரண்டு வகுப்புகளிலும் சில வழூஉச் சொற்களையும், அவற்றைத் திருத்தமாகக் கூறும் முறைமையையும் அறிந்தீர்கள். இவ் வகுப்பிலும் அவ்வாறே சில வழூஉச் சொற்களையும், அவற்றைத் திருத்தமாகக் கூறும் விதத்தையும் தெரிந்து கொள்ளுங்கள்.

| வழூஉச்சொல் | | திருத்தம் |
|---|---|---|
| உத்திரவு | — | உத்தரவு |
| ஊரணி | — | ஊருணி |
| கயறு | — | கயிறு |
| கொடக்கூலி | — | குடிக்கூலி |
| சுவற்றில் | — | சுவரில் |
| பசுங்கன்று | — | பசுக்கன்று |
| பசும் பால் | — | பசுப்பால் |
| ரொம்ப | — | நிரம்ப |
| வயறு | — | வயிறு |
| முழுங்கு | — | விழுங்கு |
| ஒருவள் | — | ஒருத்தி |
| விரை | — | விதை |
| அதுகள் | — | அவைகள் |

### பயிற்சி

மேற்கூறப்பட்டவை அல்லாத சில வழூஉச் சொற்களையும் அவற்றின் திருத்தத்தையும் கூறுக.

## 4. ஒரு பொருட் பல சொற்கள் பொருளில் நுட்பமாக வேறுபடுதல்

ஒரு பொருட் பல சொற்கள் பொருளில் நுட்பமாக வேறுபடும் விதத்தைப் பற்றி முந்திய வகுப்புக்களிலும் நீங்கள் அறிந்தீர்கள். இவ்வகுப்பிலும் அவற்றைப் பற்றி மேலும் சிறிது தெரிந்து கொள்ளுங்கள்.

*அறிவித்தான், தெரிவித்தான், புலப்படுத்தினான்*—இவை மூன்றும் ஒருவனை அறியுமாறு செய்தான் எனப் பொருள்படும். ஆயினும் இவற்றுள் நுட்பமான பொருள் வேறுபாடு உண்டு. அதாவது,

*அறிவித்தான்*—என்பது சாதாரணமாக அறியுமாறு செய்தான் எனப் பொருள்படும்.

*தெரிவித்தான்*—என்பது தெரியாத ஒன்றைத் தெரியக் காட்டினான் எனப் பொருள்படும்.

*புலப்படுத்தினான்*—என்பது அறியுந்தனையும் விடாது, சொல்லி, அவன் அறிவுக்குட்படுமாறு செய்தான் எனப் பொருள்படும்.

தமிழில் ஓசையைக் குறிக்கும் சொற்கள் பல உள்ளன. அவை பொருளில் நுட்பமாக வேறுபடுவதைப் பின்னர் காட்டியுள்ள உதாரணங்களால் காண்க.

*முழக்கு, இரட்டு, கலி, ஒலி, இசை, பிளிறு, இரை, குரை, கனை, இரங்கு, அழுங்கு, அதிர்,*

சிலே, சும்மை, கௌவை, கம்பலே, அரவம், ஆர்ப்பு—இவை ஓசையைக் குறிக்கும் சொற்கள். இவற்றில்,

ஒலி, அரவம்—இவை மெல்லிய ஓசையைக் குறிக்கும்.

முழக்கு, இரட்டு, அதிர், இரை—இவை பேரோசையைக் குறிக்கும்.

கலி, இரங்கு, அழுங்கு—இவை துன்ப ஓசையைக் குறிக்கும்.

ஆர்ப்பு—இது மகிழ்ச்சியோசையைக் குறிக்கும்.

இசை—இது இனிய ஓசையைக் குறிக்கும்.

பிளிறு, கனே, குரை—இவை முறையே யானே, குதிரை, நாய் ஆகிய விலங்குகளின் ஒலியைக் குறிக்கும்.

சிலே, சும்மை, கௌவை, கம்பலே—இவை பலவகை ஒலிகளின் கலப்பைக் குறிக்கும்.

### பயிற்சி

1. ஒரு பொருட் பல சொற்கள் பொருளில் நுட்பமாக வேறுபடுவதற்கு இங்குக் காட்டப்படாத உதாரணம் ஒன்று கூறுக.

2. கனே, பிளிறு, இசை, ஆர்ப்பு, முழக்கு, கம்பலே—இவற்றை வாக்கியங்களில் அமைக்க.

## 5. கால இடைநிலைகள்

வினைச்சொல்லில் இடைநிலைகள் காலங்காட்டும். அதனால் அவை கால இடைநிலைகள் எனப்படும். இந்த இடைநிலைகளைப் பற்றி முன் வகுப்பிலேயே நீங்கள் படித்திருக்கிறீர்கள். இப்போது அவற்றை நினைவு கூருங்கள்.

படித்தான் — இதில் த் இடைநிலை
உண்டான் — இதில் ட் இடைநிலை
கற்றான் — இதில் ற் இடைநிலை
வினவினான் — இதில் இன் இடைநிலை
போனான் — இதில் ன் இடைநிலை
போயது — இதில் ய் இடைநிலை
தேடியது — இதில் இ இடைநிலை

மேற்கண்டவற்றிலிருந்து த், ட், ற், இன், ன், ய், இ ஆகியவை இறந்தகால இடைநிலைகள் என அறியலாம்.

வாரா நின்றான்— இதில் ஆநின்று இடைநிலை
வருகின்றான் — இதில் கின்று இடைநிலை
வருகிறான் — இதில் கிறு இடைநிலை

மேற்கூறியவற்றிலிருந்து ஆநின்று, கின்று, கிறு என்பவை நிகழ்கால இடைநிலைகள் என அறியலாம்.

படிப்பான் — இதில் ப் இடைநிலை
தருவான் — இதில் வ் இடைநிலை

மேற்கண்டவற்றிலிருந்து ப், வ் என்பவை எதிர்கால இடைநிலைகள் என அறியலாம்.

### பயிற்சி

1. பின் வரும் வினைச்சொற்களிலுள்ள இடைநிலைகளை எடுத்தெழுதி அவை இன்னகால இடைநிலைகள் எனக் கூறுக.

தருகின்றான், சொன்னேன், கண்டாய், இருந்தான், வருவான், இருப்பான், பார்த்தாய், வாசியாநின்றான், போயது, தாவியது, தேடினேன்.

## 6. இடைச்சொல்

வேற்றுமை உருபுகள், விகுதிகள், இடைநிலைகள், உவமவுருபுகள் — இவற்றைப் பற்றி முன்னமே நீங்கள் அறிந்திருக்கிறீர்கள். இவையெல்லாம் இடைச்சொல் என்பதனுள் அடங்கும். இடைச்சொல் என்பது தமிழ்ச்சொற்களில் ஒரு வகையாம்.

(உ-ம்) 1. இராமனை நோக்கினான்.

இந்த வாக்கியத்தில் இராமனை நோக்கினான் என இரண்டு சொற்கள் உள்ளன. இவற்றுள்

இராமனை என்பதிலுள்ள ஐ என்னும் இரண்டாம் வேற்றுமை உருபு இடைச்சொல்லாகும்.

நோக்கினான் என்பதில் இன் இறந்தகால இடைநிலை; ஆன் ஆண்பால் விகுதி. இந்த இடைநிலையும், விகுதியும் இடைச்சொற்கள்.

(உ-ம்) 2. நிலா பால்போல இருந்தது.

இந்த வாக்கியத்தில் நிலா, பால், போல, இருந்தது என நான்கு சொற்கள் உள்ளன. இவற்றுள்,

நிலா—பெயர்ச்சொல்; இதில் இடைச்சொல் இல்லை.

பால்—பெயர்ச்சொல்; இதில் இடைச்சொல் இல்லை.

போல—இது உவம உருபு. இது இடைச்சொல்

இருந்தது—இதில் த் இடைநிலை; இது இடைச் சொல்.

து—விகுதி; இது இடைச்சொல்.

இன்னும் சுட்டெழுத்து, வினு எழுத்து இவை களைப்பற்றி உங்களுக்குத் தெரியும். இவையெல்லாம் இடைச் சொற்களாம்.

| | | | |
|---|---|---|---|
| (உ-ம்) | அப்பொருள் | — அ — | இடைச்சொல் |
| | இப்பிள்ளை | — இ — | இடைச்சொல் |
| | உப்பக்கம் | — உ — | இடைச்சொல் |
| | எப்பலகை | — எ — | இடைச்சொல் |

இந்த சுட்டு வினுச்சொற்கள் முறையே அந்த, இந்த, உந்த, எந்த எனத் திரிந்தும் வரும். இவையும் இடைச்சொற்களாம்

| | | | |
|---|---|---|---|
| (உ-ம்) | அந்தப்பையன் | -அந்த- | இடைச்சொல் |
| | இந்தப்பெண் | -இந்த- | இடைச்சொல் |
| | உந்தச்சிறுவன் | -உந்த- | இடைச்சொல் |
| | எந்தப் பிள்ளை | -எந்த- | இடைச்சொல் |

மற்று, உம் என்பவையும் இடைச்சொற்களாம்.

(உ-ம்) *நீ இங்கு வந்தாய்; மற்று அதனால்* என்ன பயன்?

*கந்தனும் வேலனும் முருகனும்* வந்தனர்.

## பயிற்சி

*பின்கண்ட வாக்கியங்களில் உள்ள இடைச்சொற்களை எடுத்தெழுதுக:*

1. அவன் என்னோடு பேசினான்.
2. கண்ணனும் வள்ளியும் வருகின்றார்கள்.
3. வேலனுக்கு இவன் பழங்கள் கொடுத்தான்.
4. வீட்டிலிருந்து நான் வந்துசேர நேரம் ஆயிற்று.
5. அந்த நாய் எலியின்மீது புலிபோலப் பாய்ந்தது.

## 7. உரிச்சொல்

*பின்கண்டவைகளைக் கவனி:*

*உறு*புகழ்—இங்கு *உறு* என்பது *மிகுந்த* எனப் பொருள்பட்டுப் புகழ் எத்தகையது என அதன் பண்பை உணர்த்தும்.

*நனி*பேதை— இங்கு *நனி* என்பதும் அவ்வாறே *மிகுந்த* எனப் பொருள்பட்டு எத்தகைய பேதை எனப் பேதையின் பண்பை உணர்த்தும்.

புகழ், பேதை என்பன பெயர்கள் ஆகையால் *உறு*, *நனி* இரண்டும் பெயரின் பண்பை உணர்த்துவனவாம்.

*சாலப்பேசினான்*—இங்கு *சால* என்பது மிகுதி யும் எனப்பொருள்பட்டு பேசினான் ஏன்னும் வினை யின் பண்பை உணர்த்தும்.

*நனி தின்றான்*—இங்கு *நனி* என்பது தின்றான் என்னும் வினையின் பண்பை உணர்த்தும்.

மேற்கண்டவாறு பெயர்வினைகளின் பண்பை உணர்த்தும் சொற்கள் உரிச்சொற்கள் எனப்படும்.

*சால, உறு, தவ, நனி, கூர், கழி*—இந்த உரிச் சொற்கள் மிகுதி என்னும் ஒரு பொருளைக் குறிக்கும் உரிச்சொற்களாம்.

கடி என்னும் உரிச்சொல் பல பொருள்களை யுடைய உரிச்சொல். இதன் பொருள் வேறுபாடுகளை அடியிற் காண்க.

கடிமலர் – (மணமுள்ள) மலர்; கடி–மணம்
கடிமணம் – (புதிய) மணம்; கடி–புதுமை
கடிமனை – (காவலையுடைய)மனை; கடி–காவல்
கடிமுரசு – (ஆர்க்கும்) முரசு; கடி–ஆர்ப்பு
கடிமார்பு – (விளக்கம்) பொருந்திய மார்பு; கடி–விளக்கம்
கடிமிளகு – காரமான மிளகு; கடி–கரிப்பு

### பயிற்சி

பின்வரும் வாக்கியங்களிலுள்ள உரிச்சொற்களை எடுத் தெழுது :

1. இராவணன் இராமன்மீது கடிப்பகை கொண்டான்.
2. குமணன் கொடை கொடுத்து உறுபுகழ் பெற்றான்.

3. நனி பேதையாகிய அப் பெண் அறியாது பேசி விட்டாள்.

4. அவ்வூரில் கடிமணம் நடைபெற்றது.

5. கடிமலர் தூவிக் கடவுளைத் தொழுதான்

6. ஆலயம் தொழுவது சாலவும் நன்று.

## 8. சாரியைகள்

சொற்களில் பகுதி, விகுதி, இடைநிலை என மூன்று உறுப்புக்கள் அமைந்திருப்பதை நீங்கள் அறிவீர்கள். இவற்றைத் தவிரச் சாரியை என்னும் மற்றொரு உறுப்பும் சில சொற்களில் அமைந்திருக்கும். சாரியைகள் பெரும்பாலும் இடைநிலைக்கும் விகுதிக்கும் இடையில் அமைந்திருக்கும்.

(உ-ம்) (1) *தின்றனன் — (தின் + ற் + அன் + அன்); இதில் தின்—பகுதி; ற்—இடைநிலை; அன்—சாரியை; அன்—விகுதி.*

(2) சொல்லியது—(சொல் + ல் + இ + அ + து); இதில் சொல்—பகுதி; ல்—புணர்ச்சியால் தோன்றிய எழுத்து; இ—இடைநிலை; அ—சாரியை; து—விகுதி. வினைச்சொல்லில் சாரியை வருவது இங்கு கூறப் பட்டது. இனி பெயர்ச் சொல்லிலும் சாரியை வரும்.

(உ-ம்) (1) மரத்தினுக்கு — (மரம் + அத்து + இன் + உ + கு)—இதில் அத்து, இன், உ என்பவை சாரியைகள்.

(2) புளியங்காய் — (புளி + அம் + காய்); இதில் அம் சாரியை.

(3) அவற்றை — (அவ்+அற்று+ஐ); இதில் அற்று சாரியை.

(4) பதிற்றுப்பத்து—(பத்து+இற்று+பத்து); இதில் இற்று சாரியை.

### பயிற்சி

பின்வரும் சொற்களிலுள்ள சாரியைகளை எடுத்தெழுதுக:
கோவிலுக்கு, இடத்தின், வேப்பங்காய், நடந்தனன், எண்ணியது, அவனுக்கு, இடத்தினின்று.

## 9. ஆகுபெயர்

பின்கண்டவைகளைப் படி :

நாடு அவனைப் புகழ்ந்தது.
வெற்றிலை நட்டான்.
வெள்ளை உழுதது.
பொங்கல் உண்டான்.
நான்கு கஜம் கொடு.

இங்குள்ள வாக்கியங்களில் தடித்த சொற்கள் எவைகளைக் குறிக்கின்றன?

நாடு என்னும் இடத்தின் பெயர், இடத்தைக் குறிக்காமல் அந்த இடத்திலுள்ள மக்களைக் குறித்தது.

வெற்றிலை என்னும் சினையின் பெயர், அந்தச் சினையை உடைய கொடியாகிய முதற்பொருளைக் குறித்தது.

வெள்ளை என்னும் நிறக் குணத்தின் பெயர். அக்குணத்தையுடைய மாட்டைக் குறித்தது.

பொங்கல் என்னும் தொழிலின் பெயர் அத் தொழிலாலுண்டான உணவுப்பொருளைக் குறித்தது.

கஜம் என்னும் நீட்டலளவைப் பெயர், அவ்வள வினைக்கொண்ட துணியைக் குறித்தது.

மேற்கண்டவாறு, ஒரு பொருளின் பெயர் அப் பொருளைக் குறிக்காமல் அதற்குத் தொடர்பான மற்றொரு பொருளைக் குறித்தால் அது ஆகுபெயர் எனப்படும். இவ்வாறன்றிப் பொருளுக்கு இயல்பாக அமைந்த பெயர் இயற்பெயர் எனப்படும்.

(உ-ம்) மரம், கல், நாடு, ஊர், வெள்ளை, கறுப்பு.

குறிப்பு: ஆகுபெயர் புதிதாக உண்டாக்கப் படுவது அல்ல. தொன்றுதொட்டு வழங்கி வருவதாம்.

## பயிற்சி

பின்கண்ட வாக்கியங்களிலுள்ள ஆகுபெயர்களை எடுத்து எழுதி, அவை இன்னவற்றிற்குப் பெயர் என்றும், இன்னவை வினைக் குறித்தன என்றும் குறிக்க.

1. மருக்கொழுந்து நட்டான்.
2. வற்றல் உண்டான்.
3. காவி உடுத்தினன்.
4. தாமரை சூடினன்.
5. ஊர் சிரித்தது.

# 10. வெளிப்படைக் குறிப்பு

சில சொற்கள் வெளிப்படையாகப் பொருள் உணர்த்தும். வேறு சில சொற்கள் குறிப்பாகப் பொருள் உணர்த்தும். வெளிப்படையாகப் பொருள் உணர்த்துவது வெளிப்படைச் சொல்லாம். குறிப்பாகப் பொருள் உணர்த்துவது குறிப்புச் சொல்லாம்.

(உ-ம்) 1. *மாடுகள்* — இச் சொல் வெளிப்படையாகப் பொருள் உணர்த்தும்போது பசு மாடு, காளை மாடு இரண்டையும் உணர்த்தும்:

அந்த மாடுகள் உழுதன — இங்கு உழுதன என்னும் செயலால் மாடுகள் என்னும் சொல் காளை மாடுகளைக் குறிப்பால் உணர்த்திற்று.

2. *மூவர்*—இது வெளிப்படையாகப் பொருளை உணர்த்தும்போது மூன்று மனிதரைக் குறிக்கும்.

மூவர் தேவாரம் — இதில் மூவர் என்பது குறிப்பாக, சம்பந்தர், அப்பர், சுந்தரர் என்னும் சைவசமயாச்சாரியரைக் குறிக்கும்.

3. *வெள்ளை* — இது வெளிப்படையாகப் பொருள் உணர்த்தும்போது வெண்மை நிறத்தைக் குறிக்கும்.

*வெள்ளை* கறந்தது—இங்கு வெள்ளை என்பது குறிப்பாக வெள்ளை நிறமுடைய பசுவைக் குறித்தது.

4. *பொற்றொடி* — இது வெளிப்படையாகப் பொருள் உணர்த்தும்போது பொன்னாலான வளையலை உணர்த்தும்.

பொற்றொடி வந்தாள். — இங்குப் பொற்றொடி என்பது குறிப்பாக ஒரு பெண்ணை உணர்த்திற்று.

5. *பொய்யாமொழி* — இது வெளிப்படையாகப் பொருள் உணர்த்தும்போது உண்மை மொழியை உணர்த்தும். குறிப்பாக இது திருக்குறளை உணர்த்தும்.

6. வேங்கை — இது வெளிப்படையாகப் பொருள் உணர்த்தும்போது புலியைக் குறிக்கும்.

*பாயா* வேங்கை — இதில் வேங்கை என்பது குறிப்பாக ஒருவகை மரத்தை உணர்த்திற்று.

7. *கால் கழுவி வந்தான்* — இதில் *கால் கழுவி* என்பது வெளிப்படையாகக் காலைக் கழுவுவதையும், குறிப்பாக மலங் கழுவுவதையும் குறிக்கும்.

### பயிற்சி

**மேற்கண்டவை யல்லாத குறிப்புச் சொற்கள் சிலவற்றைக் கூறுக.**

## 11. இயல்பு வழக்கு

*கோவில்* — இது இலக்கணத்தோடு பொருந்தி இறைவனது இருப்பிடத்தைக் குறித்தது.

*இல்முன்* — இது இலக்கணத்தோடு பொருந்தி வீட்டின் முன்புறத்தைக் குறித்தது.

*நகர்ப்புறம்* — இது இலக்கணத்தோடு பொருந்தி நகரின் வெளிப்புறத்தைக் குறிக்கும். ஆகவே மேற்கண்டவை இலக்கணம் உடையவை ஆகும்,

*கோயில்*—இது இலக்கணத்தோடு பொருந்தியதல்ல: ஏனெனில் கோ + இல் = கோவில் எனச் சேர வேண்டுமேயன்றிக் கோயில் என யகரவுடம்படுமெய் பெறுதல் கூடாது. இது இலக்கணமுடையது அன்றாயினும், பெரியோர்களால் இலக்கணமுடையதாகக் கொள்ளப்பட்டிருக்கிறது.

*முன்றில்* — இது இல்முன் என்னும் பொருளையே உடையது. இல்லும், முன்னும் முன்பின்னாகச் சேர்ந்து மாறுபாடு அடைந்து இவ்வாறு வந்துள்ளன. இது இலக்கணம் அன்றாயினும், இலக்கணமுடையது போலச் சான்றோரால் கொள்ளப்பட்டுள்ளது.

*புறநகர்* — இதுவும் நகர், புறம் என்னும் சொற்கள் முன் பின்னாகச் சேர்ந்து வந்தது. இதுவும் இலக்கண மன்றாயினும், இலக்கணமுடையது போலச் சான்றோரால் கொள்ளப்பட்டது. இவ்வாறு இலக்கணமன்றாயினும் இலக்கணமுடையதுபோலச் சான்றோரால் கொள்ளப்பட்டவை **இலக்கணப் போலி** எனப்படும்.

*அருமந்த* — *அருமருந்தன்ன* என்பது இவ்வாறு மாறி வந்தது.

தஞ்சை—தஞ்சாவூர் என்பது இவ்வாறு மாறி வந்துள்ளது.

எந்தை—எமது தந்தை என்பது இவ்வாறு மாறி வந்துள்ளது.

மேற்கண்டவாறு சொற்கள் பலவித மாறுபாடுகளை அடைந்து வருவது மரூஉ எனப்படும்.

இலக்கணமுடையது. இலக்கணப் போலி. மரூஉ என இயல்பு வழக்கு மூன்று வகைப்படும்.

இயல்பு வழக்காவது இயல்பாய் வழங்கி வரும் உலக வழக்கு ஆகும்.

### பயிற்சி

இலக்கணமுடையது, இலக்கணப்போலி, மரூஉ என்னும் மூவகை இயல்பு வழக்குகளுக்கும் இங்குக் காட்டப்படாத உதாரணங்கள் சில கூறுக.

## 12. தகுதி வழக்கு

பின் கண்டவற்றைக் கவனி:

குழந்தை வெளிக்குப் போயிற்று—இது குழந்தை மலங்கழித்தது என்பதைத் தெரிவிக்கும்

அவன் கால் கழுவி வந்தான்—இது ஒருவன் மலங் கழுவி வந்தான் என்பதைக் குறிக்கும்.

இவ்வாறு ஒன்றை மறைத்து மாற்றிக் கூறுதல். இடக்கர் அடக்கல் எனப்படும். இடக்கர் அடக்க

லாவது தகுதி அல்லாததைத் தகுதியாக ஆக்கிக் கூறுதலாம்.

*தாலி பெருகிற்று*—இது தாலி அறுந்ததை உணர்த்தும்.

*இயற்கை எய்தினார்*—இது இறந்தார் என்பதைக் குறிக்கும்.

இவை மங்கலம் அல்லாதனவற்றை மங்கலமாகக் கூறியவை. ஆதலால் இவை **மங்கலம்** எனப்படும்.

*பறி*—இது ஒரு கூட்டத்தார் பொன்னுக்குப் பெயராக வழங்கும் சொல்.

*சொல்விளம்பி*—இது ஒரு கூட்டத்தார் கள்ளுக்குப் பெயராக வழங்கும் சொல்.

இவை குறிப்பிட்ட கூட்டத்தாரால் தமக்கு மட்டும் விளங்கும் வகையில் கூறியவை. ஆதலால் *குழூஉக்குறி* எனப்படும். **இடக்கரடக்கல், மங்கலம்,** *குழூஉக்குறி* ஆகிய மூன்றும் **தகுதி வழக்காம்.** தகுதி வழக்காவது தகுதியல்லாதனவற்றைத் தகுதியாக ஆக்கிக் கூறும் வழக்காம்.

## பயிற்சி

இடக்கரடக்கல், மங்கலம், குழூஉக்குறி என்னும் தகுதி வழக்கிற்கு இங்குக் காட்டப்படாத உதாரணங்கள் சில கூறுக.

# III. தொடராக்கம்

## 1. தொகைநிலைத் தொடர்கள்

பின்கண்டவைகளைக் கவனி :

1. *நிலம் விற்றான்* —இது *நிலத்தை விற்றான்* எனப் பொருள்படும். இங்கு இரண்டாம் வேற்றுமை உருபு ஆகிய **ஐ** என்பது தொக்கு (மறைந்து) நிற்கிறது.

2. *பவள வாய்*—இது பவளம் போன்ற வாய் எனப் பொருள்படும். இங்கு *போன்ற* என்னும் உவமவுருபு தொக்கு நிற்கிறது.

இவ்வாறு இடையில் சில சொற்கள் தொக்கு நிற்கச் சொற்கள் தொடர்ந்து வருவது தொகைநிலை எனப்படும். இவ்வாறு தொடர்ந்து வந்த தொடர் *தொகைநிலைத் தொடர்* எனப்படும்.

முதல் உதாரணத்தில் இரண்டாம் வேற்றுமை உருபு தொக்கு வந்ததை அறிந்தீர்கள். அது இரண்டாம் வேற்றுமைத் தொகை. அதுமட்டுமின்றி மூன்று, நான்கு, ஐந்து, ஆறு, ஏழு ஆகிய வேற்றுமை உருபுகளும் மேற்கண்டவாறு தொக்கு நிற்கச் சொற்கள் தொடர்ந்து வருவது உண்டு. அவை அந்தந்த வேற்றுமைத் தொகைகளாகும்.

(உ-ம்) *தலை வணங்கினான்* — இது *தலையால் வணங்கினான்* எனப் பொருள்படும். இங்கு **ஆல்**

என்னும் மூன்றும் வேற்றுமை உருபு தொக்கு நின்றது. (இது மூன்றும் வேற்றுமைத் தொகை.)

*வண்ணான் கூலி*—இது வண்ணானுக்கு உரிய *கூலி* எனப் பொருள்படும். இங்கு கு என்னும் நான்காம் வேற்றுமை உருபு தொக்கு வந்தது. (இது நான்காம் வேற்றுமைத் தொகை)

*நகர் நீங்கினான்*—இது நகரின் (நகரிலிருந்து) நீங்கினான் எனப் பொருள்படும். இங்கு இன் என்னும் ஐந்தாம் வேற்றுமை உருபு தொக்கு நின்றது. (இது ஐந்தாம் வேற்றுமைத் தொகை.)

*கண்ணன்கை*—இது கண்ணனது கை எனப் பொருள்படும். இங்கு *அது* என்னும் ஆறும் வேற்றுமை உருபு தொக்கது. (இது ஆறும் வேற்றுமைத் தொகை.)

*மரப்பொந்து*—இது மரத்தின் கண் உள்ள பொந்து என்று பொருள்படும். இங்கு ஏழாம் வேற்றுமை உருபு தொக்கு நின்றது. (இது ஏழாம் வேற்றுமைத் தொகை.)

முதல் வேற்றுமையும் எட்டாம் வேற்றுமையும் தொகை நிலைத் தொடராக வாரா.

*சுடுசோறு*—இது சுடுகின்ற சோறு எனப் பொருள்படும். இது வினைச்சொல்லும் அதனோடு பொருந்துதற்குரிய பெயர்ச் சொல்லுமாய்த் தொடர்ந்தது. இடையில் காலங்காட்டும் இடைநிலை தொக்கு நின்றது. இவ்வாறு வருவது *வினைத்தொகை* எனப்படும்.

***கருமேகம்***—இது கருமையாகிய மேகம் எனப் பொருள்படும். இங்கு ***ஆகிய*** என்னும் பண்புருபு தொக்கு நின்றது. இவ்வாறு வருவது ***பண்பத் தொகை*** எனப்படும்.

***தாமரைக்கண்***—இது தாமரை போன்ற கண் எனப்பொருள்படும். இங்கு ***போன்ற*** என்னும் உவம உருபு தொக்கு நின்றது. இவ்வாறு வருவது ***உவமைத்தொகை*** எனப்படும்.

***இராப்பகல்***—இது இரவும் பகலும் எனப் பொருள்படும். இங்கு ***உம்மை*** தொக்கு நின்றது. இவ்வாறு வருவது ***உம்மைத்தொகை*** எனப்படும்.

***மதிமுகம் வந்தாள்***—இது மதி போன்ற முகத்தையுடைய பெண் வந்தாள் எனப் பொருள் படும். ***மதிமுகம்*** என்பது மதி போன்ற முகம் எனப் பொருள்படுமாதலால் உவமைத் தொகையாம். அத் தொகைக்கு மேலும் இங்கு அவ்வித முகத்தை உடையவள் என வேறு சில சொற்கள் தொக்கு நிற்பதைக் காண்க. இவ்வாறு வருவது ***அன் மொழித்தொகை*** எனப்படும்.

ஆகவே, தொகைநிலைத்தொடர்கள், ***வேற்று மைத்தொகை, வினைத்தொகை, பண்புத்தொகை, உவமைத்தொகை, உம்மைத்தொகை, அன் மொழித்தொகை*** என ***ஆறு*** வகைப்படும்.

## 2. தொகாநிலைத் தொடர்கள்

இடையில் எதுவும் தொக்கு நிற்காமல் சொற்கள் தொடர்ந்து வந்தால் அவை தொகா நிலைத் தொடர்களாம்.

(உ-ம்) 1. *இராமன் வந்தான்*—இது முதலில் எழுவாயும், பிறகு பயனிலையுமாகத் தொடர்ந்து வந்தது. ஆதலால் இது *எழுவாய்த் தொடராம்.*

2. *அண்ணா, வா*—இது விளியும் பயனிலையு மாகத் தொடர்ந்து வந்தது. இது *விளித்தொடராம்.*

3. *படித்த மனிதர்*—இது பெயரெச்சமும் அது கொண்டு முடியும் பெயருமாகத் தொடர்ந்தது. இது பெயரெச்சத்தொடர் எனப்படும்.

4. *வந்து சென்றான்*—இது வினையெச்சமும் அது கொண்டு முடியும் வினையுமாகத் தொடர்ந்தது. இது *வினையெச்சத்தொடராம்.*

5. *வந்தான் பரதன்*—இது முதலில் பயனிலை யும் பின்னர் எழுவாயுமாகத் தொடர்ந்து வந்தது; இது *வினைமுற்றுத்தொடர்* எனப்படும்.

6. *மற்றொன்று* — இது மற்று என்னும் இடைச்சொல்லும், அதனோடு சேருதற்குரிய சொல்லுமாகச் சேர்ந்து வந்தது. இது இடைச் *சொற்றொடர்* எனப்படும்.

7. *சாலப் பேசினான்* — இது உரிச்சொல்லும் அதனோடு சேர்தற்குரிய சொல்லுமாகச் சேர்ந்து வந்தது. இது *உரிச் சொற்றொடராம்.*

8. *பாம்பு பாம்பு* — இங்கு ஒரு சொல் பல முறை அடுக்கி வந்தது. இது அடுக்குத் தொடராம்.

ஆகவே, எழுவாய்த்தொடர், விளித்தொடர், பெயரெச்சத் தொடர், வினையெச்சந் தொடர், வினைமுற்றுந்தொடர், இடைச்சொற்றொடர், உரிச் சொற்றொடர், அடுக்குத்தொடர் என்னும் எட்டுத்தொடர்களும் தொகாநிலைத்தொடர்கள் என அறியலாம்.

## பயிற்சி

1. **பின்கண்டவை இன்ன தொகைகள் எனக்கூறுக:**

| | | | |
|---|---|---|---|
| (1) | கல்லெறிந்தான் | (6) | வேலன் புத்தகம் |
| (2) | கருங்குழல் | (7) | வீடு வாங்கினான் |
| (3) | காட்டுக்கோழி | (8) | கம்பராமாயணம் |
| (4) | சேரசோழபாண்டியர் | (9) | பசுத்கன்று |
| (5) | கொல் யானை | (10) | பொற்றொடி தின்றான் |

2. **பின்கண்டவை இன்னதொடர் எனக்கூறுக:**

| | | | |
|---|---|---|---|
| (1) | மகன் தின்றான் | (6) | போ போ போ |
| (2) | தம்பீ, வா | (7) | மற்றது |
| (3) | கற்ற கல்வி | (8) | தனி பேதை |
| (4) | சென்றான் அவன் | (9) | கோழி கூவிற்று |
| (5) | தின்று பேசினான் | (10) | பறக்கும் பட்டம் |

# IV. புணர்ச்சி

## 1. உயிர்முன் வல்லினம்

### மிகும் இடங்கள்

பின்கண்டவைகளைக் கவனி.

| | | | | |
|---|---|---|---|---|
| பாட | + | கண்டேன் | = | பாடக்கண்டேன் |
| ஓட | + | பார்த்தான் | = | ஓடப்பார்த்தான் |
| வர | + | சொன்னான் | = | வரச்சொன்னான் |
| படிக்க | + | தந்தான் | = | படிக்கத்தந்தான் |
| வாங்க | + | சென்றான் | = | வாங்கச்சென்றான் |

மேற்கண்டவற்றிலிருந்து அகரவீற்று வினையெச்சங்களின் முன் வரும் வல்லினம் மிகும் என அறியலாம்.

| | | | | |
|---|---|---|---|---|
| தேடி | + | காண் | = | தேடிக்காண் |
| ஓடி | + | போனான் | = | ஓடிப்போனான் |
| நாடி | + | செல் | = | நாடிச்செல் |
| அன்றி | + | போதல் | = | அன்றிப்போதல் |
| இன்றி | + | பார்த்தால் | = | இன்றிப்பார்த்தல் |

இகர ஈற்று வினையெச்சங்களின் முன் வரும் வல்லினம் மிகும் என இவற்றால் அறியலாம்.

| | | | | |
|---|---|---|---|---|
| வாழை | + | காய் | = | வாழைக்காய் |
| பலா | + | பழம் | = | பலாப்பழம் |
| குதிரை | + | குட்டி | = | குதிரைக்குட்டி |
| குடி | + | கூலி | = | குடிக்கூலி |
| நரி | + | தலை | = | நரித்தலை |

உயிரீற்றின் முன்வரும் வல்லினம் பெரும்பாலும் மிகும் என இவற்ருல் அறியலாம்,

### மிகா இடங்கள்

பின்கண்டவைகளைக் கவனி:

நின்ற + பையன் = நின்ற பையன்
கண்ட + கப்பல் = கண்ட கப்பல்
நிற்கின்ற + பெரியார் = நிற்கின்ற பெரியார்
வருகிற + சிறுவன் = வருகிற சிறுவன்
தருகிற + காலம் = தருகிற காலம்

அகர ஈற்றுப் பெயரெச்சங்களின் முன் வரும், வல்லினம் மிகாது என இவற்ருல் அறியலாம்.

வந்து + சேர்ந்தான் = வந்து சேர்ந்தான்
நின்று + பார்த்தான் = நின்று பார்த்தான்
செய்து + போனுன் = செய்து போனுன்
கண்டு + தந்தான் = கண்டு தந்தான்
இருந்து + சென்ருன் = இருந்து சென்ருன்

உகர ஈற்று வினையெச்சங்களின் முன்வரும் வல்லினம் மிகாது என இவற்ருல் அறியலாம்.

## 2. மெய்ம்முன் உயிர்

### லகர ளகர ஈறு

பின்கண்டவைகளைக் கவனி:

கல் + எறி = கல்லெறி
புல் + இது = புல்லிது
எள் + எடு = எள்ளெடு
முள் + எடு = முள்ளெடு

தனிக்குறிலைச் சார்ந்த லகர ளகரங்களின் முன் உயிர் வந்தால் அந்த லகர ளகரங்கள் மிகும்.

பால் + ஏடு = பாலேடு
அவல் + இது = அவலிது
வாள் + எடு = வாளெடு
அவள் + எங்கே = அவளெங்கே

தனிக் குறிலைச் சாராத லகர ளகரங்களின் முன் உயிர் வந்தால் அவை மிகா.

## 3. மெய்ம்முன் மெய்

லகர ளகர ஈறு

கல் + சட்டி = கற்சட்டி
பால் + சோறு = பாற்சோறு
முள் + செடி = முட்செடி
வாள் + போர் = வாட்போர்

லகர ளகரங்களின் முன் வல்லினம் வந்தால் அந்த லகர ளகரங்கள் முறையே, றகர டகரங்களாகத் திரியும்.

சொல் + மாலை = சொன்மாலை
பால் + மொழி = பான்மொழி
முள் + முனை = முண்முனை
நாள் + மலர் = நாண்மலர்

லகர ளகரங்களின் முன் மெல்லினம் வந்தால் அந்த லகர ளகரங்கள் முறையே னகர ணகரங்களாகத் திரியும்.

நல் + யாழ் = நல்யாழ்
முள் + யாது = முள்யாது

லகர ளகரங்களின் முன் இடையினம் வந்தால் இயல்பாகும்.

## 4. மெய்ம்முன் மெய்

### னகர ணகர ஈறு

பொன் + காசு = பொற்காசு
தன் + பெருமை = தற்பெருமை
மண் + பாண்டம் = மட்பாண்டம்
கண் + புலன் = கட்புலன்

னகர ணகரங்களின் முன் வல்லினம் வந்தால் அந்த னகர ணகரங்கள் முறையே றகர டகரங்களாகத் திரியும்.

பொன் + மணி = பொன்மணி
என் + வளையல் = என்வளையல்
தன் + மகன் = தன்மகன்
அவன் + யாழ் = அவன்யாழ்
கண் + வலி = கண்வலி

னகர ணகரங்களின் முன் மெல்லின இடையினங்கள் வந்தால் அந்த னகர ணகரங்கள் இயல்பாகும்.

## 5. மெய்ம்முன் மெய்

### மகர ஈறு

மரம் + கண்டான் = மரங்கண்டான்
இடம் + தந்தான் = இடந்தந்தான்
வலம் + சென்றது = வலஞ்சென்றது

மகர ஈறு வல்லினம் வரச் சில இடங்களில் இன மெல்லெழுத்தாகத் திரிந்தது.

மரம் + கிளை = மரக்கிளை
குணம் + குன்று = குணக்குன்று
நிலம் + பனை = நிலப்பனை

மகர ஈறு வல்லினம் வரச் சில இடங்களில் கெட்டு, வந்த வல்லினம் மிகுந்தது.

மனம் + மாழ்கிற்று = மனமாழ்கிற்று
மனம் + நெகிழ்ந்தது = மனநெகிழ்ந்தது
மரம் + வேர் = மரவேர்

மகர ஈறு மெல்லின இடையினங்கள் வரச் சில இடங்களில் கெட்டது.

## 6. சில விசேடப் புணர்ச்சிகள்

பூ + கொடி = பூங்கொடி
பூ + செடி = பூஞ்செடி
பூ + தாது = பூந்தாது
பூ + புகார் = பூம்புகார்

பூ என்னும் சொல்லின்முன் வல்லினம் வந்தால் வந்த வல்லினத்துக்கு இனமான மெல்லினம் மிகும்.

பல + பல = பலபல, பலப்பல, பல்பல
பல + யானை = பலயானை, பல்யானை
பல + மணி = பலமணி, பன்மணி
சில + சில = சிலசில, சிற்சில, சிலச்சில
சில + நாள் = சில நாள், சின்னாள்
சில + வளை = சிலவளை, சில்வளை

பல, சில என்பவைகளின் முன் அதே சொற்கள் வந்தாலும், வேறு சொற்கள் வந்தாலும் அவை இயல்பாகவேனும் பல மாறுபாடுகளை அடைந்தேனும் புணரும்.

அகம் + கை = அங்கை
அகம் + செவி = அஞ்செவி

அகம் என்னும் சொல்லின் முன்னர்க் கை, செவி என்னும் சொற்கள் வந்தால், அந்த அகம் என்பதன் இடையிலுள்ள ககரமும் அகரமும் கெடும்.

## பயிற்சி

**பின்கண்டவை இன்ன விதிப்படி புணர்ந்தன எனக்கூறுக:**

1. படித்த பையன்
2. தென்மணி
3. பொற்கலம்
4. அங்கை
5. இடஞ்சிறிது
6. நிலப்பனை
7. கண்மணி
8. வந்து போனான்
9. சிலச்சில
10. பல்காலம்
11. தேடிச்சென்றான்
12. நாடிக்கண்டான்
13. பல்லுடைந்தது
14. கண் வலி
15. முள்வெளி
16. முண் முருங்கை
17. எட்செடி
18. கட்புலன்
19. மரநார்
20. பூம்பத்தர்

# V. அணிகள்

## 1. தற்குறிப்பேற்ற அணி

1. "கண்ணன் துவாரகையில் புகுந்தபோது அந்த நகரத்துக் கொடிகள் ஆடியது, கண்ணனை அன்போடு கைகாட்டி வரவேற்பதுபோல் இருந்தது"

மேற்கண்ட வாக்கியத்தில் காற்றால் கொடிகள் ஆடியதைக் குறித்து, புலவர் தமது குறிப்பை ஏற்றிக் கூறுவாராய், அவை கண்ணனை வரவேற்ப தற்காக ஆடின என்று கூறியது காண்க.

2. "நிலத்தின் மீது அந்தப் பௌர்ணமி நாளில் வெள்ளிய நிலாப் பரவியிருந்ததானது, நிலமகள் வெள்ளைப் போர்வையைப் போர்த்துக் கொண்டது போன்று இருந்தது."

மேற்கண்ட வாக்கியத்தில் இயல்பாக நிலாப் பரந்ததைக் குறித்துப் புலவர் தம் குறிப்பை ஏற்றி, நிலமகள் வெள்ளைப் போர்வை போர்த்துக்கொண்ட தாகக் கூறியது காண்க.

இவ்வாறு இயல்பாக நிகழ்ந்த செய்தியொன்றின் மீது புலவர் தம் குறிப்பை ஏற்றி, அது ஏதோ ஒரு காரணத்தை முன்னிட்டு நிகழ்ந்ததாகக் கூறுவது தற்குறிப்பேற்ற அணியாம்.

### பயிற்சி

உங்கள் பாடப்புத்தகத்திலுள்ள செய்யுட்களில் ஏதேனும் தற்குறிப்பேற்ற அணி வந்திருந்தால் எடுத்துக் கூறுக.

## 2. தன்மை நவிற்சி யணி

உள்ளதை உள்ளபடி கூறுவது தன்மை நவிற்சி யணியாம்

(உ-ம்) 1. இந்த மலை உயரமானது.

2. குதிரை வேகமாய் ஓடுகிறது.

3. கொக்கு வெண்மை நிறமானது.

### பயிற்சி

தன்மை நவிற்சி யணிக்கு இரண்டு உதாரணம் கூறுக:

## 3. உயர்வு நவிற்சியணி

1. இந்த வீடு உயரத்தால் சொர்க்கத்தைத் தொடுகின்றது.

2. இந்த உணவு உருசியில் அமுதத்தைத் தோற்கடிக்கிறது.

3. இந்நகர் இந்திரனது அமராவதியைப் பழிப்பது.

மேற்கண்டவாறு வருவன உயர்வுநவிற்சி யணியாம்.

### பயிற்சி

உயர்வு நவிற்சி யணி உங்களுக்குப் பாடமாக வந்துள்ள செய்யுட்களில் வந்திருந்தால் எடுத்துக் கூறுக.

## 4. முரண் தொடை அணி

கல்லார்க்கும் கற்றவர்க்கும் களிப்பருளும் களிப்பே
காணார்க்கும் கண்டவர்க்கும் கண்ணளிக்கும் கண்ணே
வல்லார்க்கும் மாட்டார்க்கும் வரமளிக்கும் வரமே
மதியார்க்கும் மதிப்பவர்க்கும் மதிகொடுக்கும் மதியே.

மேற்கண்ட பாட்டில்,

| | | |
|---|---|---|
| கல்லார் | — | கற்றவர் |
| காணார் | — | கண்டவர் |
| வல்லார் | — | மாட்டார் |
| மதியார் | — | மதிப்பவர் |

என ஒன்றுக்கொன்று முரணாக உள்ள சொற்களைத் தொடுத்துக் கூறியிருத்தல் காண்க. இவ்வாறு வருவது முரண் தொடை அணியாம்.

### பயிற்சி

உங்கள் செய்யுட் பாடத்தில் முரண் தொடை அணி ஏதேனும் வந்திருந்தால் எடுத்துக் கூறுக.

# VI. நிறுத்தற் குறிகள்

சென்ற இரண்டு வகுப்புக்களிலும் நிறுத்தற் குறிகள் பலவற்றை நீங்கள் அறிந்தீர்கள். இவ் வகுப்பிலும் சிலவற்றைத் தெரிந்துகொள்ளுங்கள்.

## 1. கோடு இடுதல்

ஒரு செய்தியைக் கூறிவருங்கால், திடீரெனக் கருத்து வேறுபட்டு வேறு செய்தியைக் கூற நேர்ந்தால், இரண்டு செய்திகட்கும் இடையில் ஒரு கோட்டை இட வேண்டும்.

(உ-ம்) 1. நான் அவனுக்கு எவ்வளவோ எடுத்துச் சொன்னேன்—அதை இப்போது நினைத்துப் பயனில்லை.

2 நமது பாரதநாடு மிகப்பெரிய நாடு; ஏன்?—அதைக் கண்டம் என்றுகூடச் சொல்லலாம்.

### பயிற்சி

மேற்கண்டவாறு நீங்கள் இரண்டு வாக்கியங்கள் கூறுங்கள்.

## 2. இடைப்பிற வைப்புக் குறிகள்

ஒரு செய்தியை முற்றும் கூறி முடிக்குமுன் இடையில் ஒரு செய்தியைப் புகுத்த நேரிடுமானல், இடையில் புகுத்தும் செய்திக்கு முன்னும் பின்னும் கோடு இட வேண்டும். இவ்வாறு இடப்படும் இரண்டு கோடுகள் **இடைப்பிற வைப்புக் குறிகளாம்.**

(உ-ம்) 1. நீ செய்யும் பெருந்தவறுகள்—நீ என்ன நினைத்துக்கொண்டாலும் சரி — எனக்குக் கொஞ்சமும் பிடிக்கவில்லை.

2. உனக்கு நான் கூறுவது — நீ என்னவோ முகத்தைத் திருப்பிக்கொள்கிறாய்—மிகவும் நன்மை பயப்பதாகும்.

### பயிற்சி

1. உங்கள் வசன பாடங்களில் இத்தகைய வாக்கியங்கள் இருந்தால் எடுத்து எழுதுக.

2. மேற்கண்ட விதமான வாக்கியங்கள் இரண்டு கூறுக.

## 3. பிறைக் குறிகள்

( ) இவை பிறைக் குறிகள்

வாக்கியங்களின் இடையில் ஏதாவது ஒரு செய்தியை விளக்க நேர்ந்தால், விளக்கிக் கூறிய செய்திக்கு முன்னும் பின்னுமாக இக்குறிகள் இடப்படும்.

(உ-ம்) கல்வி கற்பவன் நாற்பேறுகளையும் (அதாவது அறம், பொருள், இன்பம், வீடு என்னும் நான்கையும்) ஒருங்கே அடைவான்.

வேறு சில இடங்களிலும் இப்பிறைக் குறிகள் இடுவதுண்டு.

(உ-ம்) 1. அவர் நிரம்பக் கல்வி கற்றவர். (இவ்வாக்கியத்தை எதிர்மறை வாக்கியமாக மாற்றிக் கூறுக.)

2. வீமன் ———— மிகுந்தவன். (கோடிட்ட இடத்தில் ஏற்ற ஒரு சொல்லை அமைக்க)

3. ———— கருமை நிறமானது. (இங்கு கோடிட்ட இடத்தில் ஏற்ற ஒரு சொல்லை அமைக்க)

இவ்வாறு பயிற்சி தருதற்குரிய இடங்களில் இப் பிறைக் குறிகள் இடப்படுவது உண்டு.

### பயிற்சி

1. பிறைக்குறி பொருந்துமாறு நான்கு உதாரணங்கள் தருக.

## பயிற்சி வினாக்கள்

1. எழுத்துக்கள் சொல்லில் இடத்துக்கேற்ப ஒலி மாறி வருவதற்குப் பத்து உதாரணங்கள் தருக.

2. சுட்டு வினாச் சொற்கள் தொகுதியாக வருவதற்கு மூன்று தொகுதி உதாரணங்கள் தருக.

3. பின்கண்ட பெயர்களில் இடுகுறி காரணப் பெயர்களைத் தனித்தனியே எடுத்தெழுதிக் காரணப் பெயர்களுக்குக் காரணமும் கூறுக,

வளையல், முக்காலி, தலை, கால், கடல், கப்பல், சிலம்பு, கரியன். காற்ருடி, நாற்காலி.

4. பின்கண்ட வழூஉச் சொற்களைத் திருத்திக் கூறுக;

தாவாரம், முந்தாணி, எதுகள், ஒசனை, அக்கிருவம், முழுங்கு, குடக்கூலி, எறக்கம், கொழப்பம்.

5. ஒருபொருட் பலசொற்கள், பொருளில் நுட்பமாக வேறுபடுவதற்கு ஏதாவது ஒரு உதாரணம் கொடு.

6. பின்கண்டவற்றிலுள்ள இடைச் சொற்களை எடுத்தெழுதுக:

சொன்னான், காணாநின்றான், தாவியது, தருவான், மரத்துக்கு, வீட்டினின்று, இப்பெட்டி, உப்பக்கம்.

7. கடி என்னும் உரிச்சொல் உணர்த்தும் பொருள்களில் மூன்று கூறி, அவற்றுக்கு உதாரணமும் கொடுக்க.

8. ஆகுபெயர்களுக்கு நான்கு உதாரணங்கள் தருக. அவை எவ்வாறு ஆகுபெயர்களாகும் என விளக்குக.

9. குறிப்புச் சொற்களுக்கு நான்கு உதாரணங்கள் கூறி, அவை எவ்வாறு குறிப்புச் சொற்களாகும் என விளக்குக:

10. இயல்பு வழக்கின் வகைகள் யாவை? வகை ஒன்றுக்கு ஒரு உதாரணம் வீதம் தருக.

11. மங்கலம், இடக்கரடக்கல், குழூஉக்குறி, இலக்கணப்போலி, மரூஉ—இவை ஒவ்வொன்றுக்கும் ஒவ்வொரு உதாரணம் கொடுக்க.

12. பின்கண்டவை இன்ன தொகைகள் என்பதைக் காரணத்தோடு கூறுக:

இராமலக்ஷ்மணபரதசத்ருக்கினர். கூலிவேலை, வட்டப்பலகை, தோட்டவேலை, மரக்கிளை, விடு சரம், சுடுசோறு, மதிமுகம், கருங்குழல் நின்றாள், பொற்றொடி பார்த்தாள், பொற்றொடி, கருங்குவளை.

13. பின் கண்டவை இன்ன தொடர்கள் எனக் கூறுக.

கடிநகர், வந்த பையன், சாலப்பேசினான், மற்றொன்று, காக்கை பறந்தது, கண்டேன் அவனை, தங்காய் வா, கண்டு சென்றான், தீத்தீத்தீ.

14. பின்கண்டவை எவ்விதிப்படி புணர்ந்தன எனக் கூறுக.

| | | | |
|---|---|---|---|
| (1) | அஞ்செவி | (6) | கட்புலன் |
| (2) | பூஞ்செடி | (7) | எட்செடி |
| (3) | பணப்பெட்டி | (8) | ஓடிப்போனான் |
| (4) | இடந்தந்தான் | (9) | வந்த சிறுவன் |
| (5) | மணற்குன்று | (10) | வந்துசென்றான் |

15. தற்குறிப்பேற்றவணி, உயர்வுநவிற்சியணி, முரண் தொடையணி இவற்றுக்கு முறையே ஒவ்வொரு உதாரணம் தருக.

16. பின்கண்டவை எவ்வணிகள் எனக் காரணத்தோடு கூறுக.

(1) அந்த ஏழையின் ஓட்டைக் குடிசையில் நிலாவொளி வீசியதானது அந்த ஏழையின்மீது கருணை கூர்ந்து சந்திரன் விளக்காக அமைந்தது போன்றிருந்தது.

(2) அந்நகரத்து மதில்கள் சூரியமண்டலத்திற்கு மேலும் உயர்ந்திருந்தன.

(3) இனிய உளவாக இன்னாத கூறல்
கனியிருப்பக் காய்கவர்ந் தற்று.

17. இடைப் பிற வைப்புக் குறிகள் பொருந்தி வருமாறு இரண்டு வாக்கியங்கள் கூறுக.

18. பிறைக் குறிகள் எவ்வெவ் விடங்களில் வரும்? உதாரணங்கள் கூறுக.

